


09.08.2024

தலைப்புச் செய்திகள்

1. வங்கிகள் சட்டத்திருத்த மசோதா இன்று மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது.

2. ரஷ்ய ராணுவ படையில் 91 இந்தியர்கள் பணியாற்றுவது கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெ. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. சுதந்திர தினத்தை ஒட்டி இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடியை ஏற்றும் ஹர்கர் திரங்கா இயக்கம் நாடுமுழுவதும் இன்று தொடங்கியது.

4. தமிழ்நாட்டில் பள்ளி படிப்பை முடிக்கும் மாணாக்கர் உயர்கல்வி பயில வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார்.

5. பாரீஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியின் ஆடவர் 57 கிலோ எடை பிரிவு வெண்கல பதக்கத்திற்கு இந்தியாவின் அமன் ஷராவத் இன்று போட்டியிடுகிறார்.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

பங்கஜ் சவுத்ரி

வங்கிகள் சட்டத்திருத்த மசோதா இன்று மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது.

மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி இந்த மசோதாவை அறிமுகம் செய்தார்.

ரிசர்வ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, வங்கிகளுக்கான நெறிமுறைகள் சட்டம், நிதி நிறுவனங்கள் தொடர்பான சட்டங்களை திருத்தியமைப்பதற்கான வழிமுறைகள் இந்த மசோதாவில் இடம் பெற்றுள்ளன.

□□□□□□□□

ரயில்வே திருத்த சட்ட மசோதா

மக்களவையில் ரயில்வே திருத்த சட்ட மசோதா 2024 இன்று அறிமுகம் செய்யப்பட்டது.

ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் இதனை தாக்கல் செய்தார்.

1989-ஆம் ஆண்டு ரயில்வே சட்டத்தில் சில திருத்தங்களுக்கு இது வகை செய்கிறது.

ரயில்வே வாரிய அதிகாரத்தை மேம்படுத்துவது, ரயில் நிலையங்களின் தரத்தை மேம்படுத்துவது போன்றவற்றுடன், 1905-ஆம் ஆண்டு இந்திய ரயில்வே வாரிய சட்டத்தின் நடைமுறைகளை எளிமையாக்கவும் இம்மசோதா வழிகோலுகிறது.

சரக்கு பொருட்களை கடல் வழியாக கொண்டு செல்ல வகை செய்யும் மசோதாவை மத்திய துறைமுகம், கப்பல், நீர்வழித்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனாவால் மக்களவையில் இன்று அறிமுகம் செய்தார்.

1925-ஆம் ஆண்டு கடல்வழி சரக்கு பொருட்கள் பரிவர்த்தனைக்கு மாற்றாக இம்மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது

சர்வதேச நெறிமுறைகள் மற்றும் மாறிவரும் உலக சூழல்களுக்கு ஏற்ப தேவையான வழிமுறைகளை மேற்கொள்ள அரசுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க இம்மசோதா வகை செய்கிறது.

□□□□□□□

எஸ்.ஜெய்சங்கர்

ரஷ்ய ராணுவ படையில் இதுவரை 91 இந்தியர்கள் பணியாற்றுவது கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அவர், இதில் 8 பேர் உயிரிழந்ததாகவும், 14 பேர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

ரஷ்ய படையிலிருந்து வெளியேற்றப்படுவதை எதிர்பார்த்து 69 இந்தியர்கள் அங்கு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பிரச்சனையில் மத்திய அரசு தீவிரம் காட்டி வருவதாக கூறிய அவர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சரிடம் இதுகுறித்து பலமுறை எடுத்துரைக்கப் பட்டதாக கூறினார்.

கடந்த மாதம் பிரதமர் மாஸ்கோவிற்கு சென்றிருந்த போது ரஷ்ய படையில் பணியாற்றும் இந்தியர்களை விடுவிக்க, அந்நாட்டு அதிபர் உறுதியளித்ததையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஒப்பந்த அடிப்படையில் இவர்கள் பணியமர்த்தப் பட்டிருப்பதால் இந்த விடுவிப்பு பணிகள் சற்று சிரமமாக இருப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

இப்பிரச்சனையில் மத்திய புலனாய்வு முகமை, 19 பேர் மீது குற்றவியல் வழக்குகளை பதிவு செய்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

□□□□□□□

மக்களவை

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா மற்றும் வெண்கல பதக்கம் வென்ற இந்திய ஹாக்கி அணிக்கு மக்களவையில் இன்று பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

வரலாற்று சிறப்பு மிக்க இந்த வெற்றி, இளையோருக்கு உத்வேகமாக இருக்கும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 82-வது ஆண்டை ஒட்டி இப்போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு அவையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னாள் மக்களவை உறுப்பினர்களின் மறைவிற்கு அவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

□□□□□□□

போலாசிங்

மக்களவை, மாநிலங்களவையை சேர்ந்த ளுஊஇ ளுவு பிரிவு பி.ஜே.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமர் திரு. நரேந்திரமோடியை இன்று நாடாளுமன்றத்தில் சந்தித்து, இப்பிரிவினரின் உயர் வருமான உச்சவரம்பு தொடர்பான உச்சநீதிமன்றத்தின் கருத்து குறித்து மனு ஒன்றை அளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பி.ஜே.பி. உறுப்பினர் திரு. போலாசிங், இது தொடர்பான உச்சநீதிமன்றத்தின் உத்தரவு நடைமுறைப் படுத்தக்கூடாது என கேட்டுக்கொண்டார்.

பிரதமர் தங்களிடம் இது உச்சநீதிமன்றத்தின் கருத்து மட்டுமே என்று கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

□□□□□□□

ஹர் கர் திரங்கா

78-வது சுதந்திர தினத்தை ஒட்டி இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடி ஏற்றும் ஹர்கர் திரங்கா இயக்கம் நாடுமுழுவதும் இன்று தொடங்கியது

இந்த இயக்கத்தை அனைத்து மக்களும் என்றென்றும் நினைவுக்கூறும் வகையில் அதனை மாபெரும் இயக்கமாக முன்னெடுத்துச் செல்ல பிரதமர் திரு. நரேந்திரமோடி அழைப்பு விடுத்திருக்கிறார்.

அனைத்து மக்களும் தத்தம் சமூக வலைதள முகப்பு பக்கத்தில் மூவர்ணக் கொடியின் படத்தை இடம்பெற செய்ய கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒவ்வொரு இந்தியரும் தேசிய கொடியை தங்களது இல்லங்களில் ஏற்றி, அதனை செல்.்.பி படமெடுத்து ாயசபாயச வசையபெந.உழஅ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு தெரிவித்தார்.

தமது சமூக வலைதள முகப்பு பக்கத்தில் சுயவிவரப் படமாக மூவர்ண கொடியை மாற்றியுள்ளார்.

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 82-வது ஆண்டை ஒட்டி, இந்த இயக்கத்தில் பங்கேற்றவர்களுக்கு பிரதமர் அஞ்சலி செலுத்தி உள்ளார்.

சுதந்திர போராட்டத்தில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஒரு மிகப்பெரிய மாற்றத்திற்கு வழிகோலியதாக அவர் கூறியுள்ளார்.

இதனிடையே சுதந்திர தினத்தை ஒட்டி நாடுமுழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னை விமான நிலையத்தில் இன்றுமுதல் 7 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வரும் 20-ம் தேதிவரை இந்த நடைமுறை அமலில் இருக்கும்.

□□□□□□□

திரௌபதி முர்மு

உலகளாவிய எழுச்சிமிகு ஜனநாயகத்திற்கு இந்தியா சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து நாட்டின் ஆக்லாந்து நகரில் இந்திய வம்சாவளியினரிடையே இன்று உரையாற்றிய அவர், விரைவில் நம்நாடு உலகத்தின் 3-வது பொருளாதார தேசமாக உருவெடுக்கும் என்று கூறினார்.

இந்தியாவின் வளர்ச்சிக்கு குறிப்பாக கல்வித் துறையில் நியூசிலாந்தின் அனுபவமும், நிபுணத்துவமும் பங்களிப்பது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்

இந்திய பண்டிகைகள் நியூசிலாந்தில் கொண்டாடப் படுவது குறித்தும் அவர் பெருமிதம் வெளியிட்டார்.

நம்நாட்டின் கலாச்சாரத்தையும், மரபுகளையும் பேணி காக்கும் இந்திய வம்சாவளியினரை குடியரசு தலைவர் பாராட்டியுள்ளார்

□□□□□□□

டீஐஞு

ஆயுஷ் பிரிவின் தர நிர்ணயத்திற்காக ஒரு சிறப்புத் துறையை இந்திய தர நிர்ணய அமைப்பு ஏற்படுத்த உள்ளது.

ஆயுஷ் உற்பத்தி பொருட்கள் மற்றும் அதன் பயன்பாடு முறைகள் மற்றும் இத்துறையின் பாதுகாப்பு மேம்பாடு ஆகியவற்றில் இத்துறை கவனம் செலுத்தும் என்று என்று மத்திய நுகர்வோர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இத்துறையின் நிபுணர்களை கொண்டு சிறப்பு குழுக்கள் அமைப்பட்டிருப்பதாக தெரிவித்த இத்துறையின் தலைமை இயக்குநர் திரு. பிரம்மோத் குமார், தேசிய சர்வதேச நெறிமுறைகளுக்கு ஏற்ப தர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றார்.

□□□□□□□□

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் பள்ளி படிப்பை முடிக்கும் மாணாக்கர் உயர்கல்வி பயில வேண்டிதன் அவசியத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார்.

கோவை அரசு கல்லூரியில் தமிழ் புதல்வன் திட்டத்தை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், மாணக்கர் கற்றலில் ஏற்படும் தடைகளை முறியடித்து வாழ்வில் முன்னேற வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

மக்களுக்கு நேரடியாக பலனளிக்க கூடிய ஏராளமான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாகவும், ஏழை எளிய மாணாக்கரை சாதனையாளர்களாக உருவாக்க அரசு துணை நிற்கும் என்றும் கூறினார்.

தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குவதற்காக 3 லட்சத்து 28 ஆயிரம் மாணாக்கர் பயன்பெறும் வகையில் 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே கோவை ஆத்துப்பாலம் முதல் உக்கடம் வரை 470 கோடி ரூபாய் செலவில் 3.8 கிலோ மீட்டர் நீளத்திற்கு கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

□□□□□□□□

எஸ்.எஸ் சிவசங்கர் - தமிழ் புதல்வன்

பெரம்பலூரில் இத்திட்டத்தை தொடங்கி வைத்து பேசிய மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர், இத்திட்டத்தின்கீழ், பயன்பெறும் மாணாக்கருக்கு அவர்களது வங்கி கணக்கில் நேற்றே வரவு வைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

□□□□□□□

மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்

திருச்சி மாவட்டம் லால்குடி இ - வெள்ளனூரில் இன்று நடைபெறும் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.மு.பே.நேரு இன்று பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

□□□□□□□

திருவாரூர் வாய்ஸ்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10 ஆயிரத்து 712 மாணாக்கருக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சாரூஸ்ரீ இன்று தொடங்கி வைத்தார்.

அப்போது பேசிய அவர், அரசின் திட்டங்களை பயன்படுத்தி மாணாக்கர் கல்வியில் சாதனையாளர்களாக உருவாக வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

... வாய்ஸ் ...

இருவரி

அரியலூர் மாவட்டத்தில் 11-ம் வகுப்பு பயிலும் 705 பள்ளி மாணாக்கருக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ளு.ளு. சிவசங்கர் இன்று வழங்கினார்.

தமிழ்நாட்டில் பொதுவிநியோக திட்ட சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நாளை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது

இதில் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், நீக்கம், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொண்டு பயன்பெறுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் கோடை உழவுப்பணி தொடங்குவதற்கு தயாராகும் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் கையிருப்பில் உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் பொதுவிநியோக திட்ட சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நாளை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதில் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், நீக்கம், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொண்டு பயன்பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

□□□□□□□

பணியிட மாற்றம்

தமிழ்நாட்டில் 24 காவல் கூடுதல் கண்காணிப்பாளர்களை, காவல் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வுடன் பணியிட மாற்றம் செய்து அரசு இன்று உத்தரவிட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. ஜெயச்சந்திரன் சென்னை பெருநகர குற்றப்பிரிவு துறை கண்காணிப்பாளராக பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி கூடுதல் கண்காணிப்பாளர் திரு. கார்த்திகேயன், பள்ளிக்கரணை சட்ட ஒழுங்கு பிரிவு இணை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

□□□□□□□

ஆடீடீளுஇ டீனுளு

ஆடீடீளுஇ டீனுளு உள்ளிட்ட மருத்துவ படிப்புகளுக்கு மாணாக்கர் சேர்க்கைக்கான விண்ணப்ப பதிவு இன்றுடன் நிறைவடைகிறது.

இதுவரை 38 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் விண்ணப்பித்துள்ள நிலையில், தரவரிசை பட்டியல் வரும் 19-ம் தேதி வெளியிடப்படுகிறது

வரும் 21-ம் தேதி முதல் முதற்கட்ட கலந்தாய்வு தொடங்குகிறது.

□□□□□□□

மலை ரயில் வாய்ஸ்

மேட்டுப்பாளையம் - உதகை இடையிலான மலைரயில் சேவை பராமரிப்பு பணிகள் காரணமாக இன்றுமுதல் வரும் 15-ம் தேதிவரை ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

□□□□□□□

கோவில்

விருதுநகர் அருள்மிகு இருக்கண்குடி மாரியம்மன் திருக்கோவிலில், ஆடி கடைசி வெள்ளி திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 16-ம் தேதி நடைபெறுகிறது.

□□□□□□□

பாரீஸ்

பாரீஸ் ஒலிம்பிக் தடகள தொடர் ஓட்ட போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் ஜோதிகா ஸ்ரீதண்டி, ராம்ராஜ் வித்யா, கிரண், சுபா வெங்டேசன், பூவம்மா உள்ளிட்டோர் இன்று களமிறங்குகின்றனர்.

மல்யுத்த போட்டியின் ஆடவர் 57 கிலோ எடை பிரிவு வெண்கல பதக்கத்திற்கு இந்தியாவின் அமன் ஷராவத் போட்டியிடுகிறார்.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.